28th November 1970]

Loans advanced by Land Mortgage Banks

*18. *Q.*—THAVATHIRU DEIVASIGAMANI ARUNACHALA DESIKAR (KUNDRAKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether there is any proposal under the consideration of the Government to increase the percentage of loans now being given by the Land Development Banks to repay the previous loans of the agriculturists ; and

(*b*) if not, whether the Government will take steps to increase the percentage of loans?

நிலவள வங்கிகள் வழங்கும் கடன்

தவத்திரு தெய்வசிகாமணி அருணசல தேசிகர் (குன்றக்குடி அடிகளார்) : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) விவசாயிகளின் முன் கடன்களைத் தீர்க்க இப்போது நிலவள வங்கிகள் வழங்கும் தொகைகளின் சதவிகிதத்தை அதிகரிக்கும் திட்டம் அரசு ஆலோசனையில் இருக்கிறதா ?

(இ) இல்லையெனில், சதவிகிதத்தை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ)வும் (இ)யும் : விவசாயிகளின் முன் கடன்களை தீர்க்க தற்பொழுது நடைமுறையிலிருக்கும் 5 நூற்று வீதத்திற்கு பதிலாக அவர்களுக்கு வழங்கும் மொத்த ஒதுக்கப்பட்ட தொகையின் 10 நூற்று வீதம் கொடுப்பதற்கான ஒரு கோரிக்கையை, தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவள வங்கி ஆராய்ந்து வருகிறது.

தவத்திரு தெய்வசிகாமணி அருணசல தேசிகர் (குன்றக்குடி அடிகளார்) : இப்போது நில வள வங்கிகளில் இம்மாதிரியாக 5 சதவீதம் கூட கடன் கொடுக்கும் வழக்கமில்லை. கேட்டால் நிதி இல்லை என்கிருர்கள். இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் இன்றைக்கு இருக்கிற நிலைமையைச் சரியாகத் தெரிந்து கொண்டிருப்பதாக என்ஞல் சொல்ல முடியவில்லை. காரணம், மாநில நிலவள வங்கியில் 8 கோடி ரூபாய் வரை கையிருப்பு இருக்கிறது. வாங்குவோர் இல்லாமல் இருக்கிறது. எனவே நிதியில்லை என்று யாராவது சொல்வதாக இருந்தால், அருள்கூர்ந்து எனக்குத் தெரியப்படுத்திஞல், நான் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன்.

[28th November 1970

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : ஸ்ரீவில்லிப்புத்தூர் நில வள வங்கியில்கூட கடந்த பல மாதங்களாக 100-க்கு 5 சதவீதம் முன் கடன் தீர்ப்பதற்காகக் கடன் கேட்டால் பகிரங்கமாக இல்லை என்று சொல்லுகிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? முன் கடன் தீர்ப்பதற்கான கடன் தொகை 10 அல்லது 25 சதவீதம் கொடுத்தால் கூட, வாங்கிக் கொள்ளச் சித்தமாக இருக்கிறோம். எனவே அமைச்சர் அவர்கள் தந்த பதில் சரிதானா என்று மீண்டும் விளக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : முன் கடன் தீர்ப்பதற்காக என்றால், அந்தக் கடன் திருமணத்திற்காக அல்லது வீட்டுச் செலவிற்காக என்று வாங்கியிருந்தால், ஒரு வேளை அதற்குப் பணம் இல்லை என்று சொல்லியிருக்க முடியும். நாங்கள் சொல்லுகிற முன் கடன் என்பது அந்தக் கடனைக் கொண்டு நிலத்தை வளப்படுத்தியிருந்தால், அதற்குக் கண்டிப்பாகக் கொடுக்கப்படும். அப்படிப்பட்ட கடனுக்குத் தரமாட்டேன் என்றால், அதை எனக்குத் தெரிவித்தால், உடனடியாக நான் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : முன்கடன் கல்யாணம் போன்றவைகளுக்காக அன்றி, நில அபிவிருத்திக்காக அல்லது நிலத்தை வளப்படுத்துவதற்காக வாங்கியிருந்தால், அந்தக் கடனைத் தீர்க்க இப்போது கடன் கேட்டால் தரப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இப்போதே ஒவ்வொரு நிலவள வங்கியின் மூலமாகவும் ஏராளமாக, 10 லட்சம் ரூபாய் முதல் 1 கோடி ரூபாய் வரை, கொடுத்திருக்கிறோம். காஞ்சீபுரம் நில வள வங்கி மூலமாக 1 கோடி ரூபாய் கடன் கொடுத்திருக்கிறோம். திண்டுக்கல் நில வள வங்கி மூலமாக 1 கோடி கொடுக்கப்பட்டிருக்கிறது. 5 சதவீதம் பழைய கடன் தீர்க்க என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த வங்கியிலாவது 5 சதவீதத்திற்குக் குறைவாகக் கொடுத்தால், உடனடியாக கொடுக்கச் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல், முன் கடன் தீர்ப்பதற்காக என்று கேட்கும்போது கூட, மனுக்களை நிராகரிக்கிறார்கள். பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, குறிப்பாக முன்பு கடன் வாங்கி நில அபிவிருத்திக்காகச் செலவழித்திருந்தால், அந்தக் கடன் தீர்க்க இப்போது ''லோன்'' கொடுக்கலாம் என்று நமது அரசு சுற்றறிக்கை அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஏற்கெனவே சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் முன்னாளிலிருந்து இருக்கும் பழைய நில வள வங்கிகள்தான் சில வேண்டுமென்றே விதண்டாவாதமாக இந்த விதியை நடைமுறைக்குக் கொண்டு வராமல் இருக்கின்றன. பைலாவைத் திருத்திக்கொள்ளலாம். இப்போதுள்ள நில வள வங்கிகளில் இந்தக் கஷ்டமில்லை. அவைகள் புதிய சட்டத்தின் கீழ்

28th November 1970]

செயல்படுகின்றன. எனவே அதில் எந்தவிதமான குறைபாடும் இல்லை. பழைய வங்கிகளில்தான் இந்தக் குறைபாடு இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் ஊரில் இருப்பது பழைய வங்கி என்று நினைக்கிறேன். அவர்கள் சட்டத்தைத் திருத்திக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். திரு. சி. வி. ராஜகோபால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நில வள வங்கிகளில் ஏராளமாக, 8 கோடி ரூபாய் வரை யாரும் வாங்குவார் இல்லாமல் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இப்போது நிலம் வாங்க 50 சதவீதம் கட்டக் கூட பணம் இல்லாமல் திகைப்பவர் களுக்கு இந்த வங்கிகள் மூலம் கடன் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் புதிய சட்டத்தைத் திருத்த முன்வருவாரா என்று அறிய விரும்புகி றேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது நில வள வங்கியே தவிர நிலவாங்கி வங்கியல்ல.

திரு வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, நிலவள வங்கி மூலமாக முன் கடன் தீர்க்க, கடன் கொடுக்கும்படி தாக்கீது இருந் தாலும், பல நிலவள வங்கிகளுக்கு அந்த உத்திரவு வராத காரணத் தால், அவைகள் செயல்படாமல் இருக்கின்றன. அதே போல் நில அபிவிருத்திக்காக வாங்கிய கடன் குறித்து குறிப்பாக இராமநாதபுரம், மதுரை போன்ற மாவட்டங்களில் வருகிற ஏராளமான மனுக்களுக்குப் பணம் கொடுப்பதில் அதிகாரிகள் ஒத்துழைக்காமல் இருப்பதை அரசு ஆராய்ந்து, அவர்கள் ஒத்துழைக்கும்படி அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இராமநாதபுரம் மாவட் டத்திலிருந்து மாநில நில வள வங்கிக்குச் சில உறுப்பினர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களே இதைத் திருத்திக்கொள்ள முடியும். மாநில நிலவள வங்கியின் இயக்குனர் மூலமாக இதை அவர் களே செய்துகொள்ள முடியும். அரசாங்கத்தின் குறுக்கீடு இல்லாமலே செய்ய முடியும்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Art Gallery, Thanjavur

*19. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) the value of idols in the Art Gallery, Thanjavur ; and

(*b*) how they are being protected at present ?

தஞ்சைக் கலைப்பொருட்களஞ்சியம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சைக் கலைப்பொருட் களஞ்சியத்திலுள்ள விக்கிரகங்களின் மதிப்பு யாது ?

(இ) தற்போது அவை எவ்வாறு பாதுகாக்கப்பட்டு வருகின்றன?